DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | STC 385/2024 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | சசிகுமார் |
| Father Name | : | பழனிச்சாமி |
| Age | : | 40 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.07.2025.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நிறுவனத்தின் பதிவுச் சான்றினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பரிவர்த்தனைக்கு முன்னதாக எனக்கும் எதிரிக்கும் எவ்வாறு பழக்கம் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தியதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் பத்து ஆண்டுகளாக வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் உண்மையில் வருமான வரி செலுத்தவில்லை என்றாலும் அவ்வாறு செலுத்தி இருந்தால் அந்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கள் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

2. இந்த வழக்கு காசோலைகளில் தொகை மற்றும் கையொப்பம் ஒரு பேனாவாலும், காளிகாம்பாள் ட்ரேடர்ஸ் என்பது பின்னர் எழுதியது போல உள்ளது என்றால் சரிதான், அதனை காசோலை கொடுத்தபோது

கையொப்பம் செய்து தொகையை எழுதிக் கொடுத்தார், அவர் சொல்லும் போது காசோலையை வங்கியில் தாக்கல் செய்து பணமாக மாற்றிக் கொள்ளுமாறு கூறியிருந்தார், அதனால் நான் எதிரி சொன்னது பின்னிட்டு காளிகாம்பாள் ட்ரேடர்ஸ் என்பதை எழுதிக் கொண்டேன். நான் தற்போது சொன்ன விவரத்தினை எனது புகாரிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் காசோலைகளில் 1 என்பது இரு முறை எழுதியது போல் உள்ளது என்றால் இல்லை எதிரி தான் அவ்வாறு எழுதிக் கொடுத்தார். 047007 காசோலையானது மூன்று முறையும் 047008 காசோலையானது இரண்டு முறையும் வசூலுக்காக வங்கியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், எதிரி சொன்னதன் பேரில்தான் அவ்வாறு பலமுறை தாக்கல் செய்தேன். ஆனால் நான் ஒருமுறை திருப்புதலுக்கு தான் வங்கி குறிப்பானை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான் எனது புகாரிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ பிரமாண வாக்குமூலத்திலோ இவற்றை மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் இந்த விவரங்களை எனது புகாரில் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2025.07.02 18:21:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.